# காத்தான்குடி நகர சபை – 2017, மட்டக்களப்பு

## 1 நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

2017 ஆடிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 மார்ச் 29 ஆம் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததோடு கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 செப்தெம்பர் 13 இல் சபையின் தவிசாளருக்கு வழங்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம;

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து காத்தான்குடி நகர சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றினையும், காசுப்பாய்ச்சலினையும், பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக் கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்களின் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டது.

(அ) மீளாய்வாண்டின் காசுக்கூற்றின் பிரகாரம் காணி மற்றும் கட்டடங்களின் கொள்வனவுக்காக தொகை ரூபா 11,035,346 செலவு செய்யப்பட்டிருந்தும் நிதிக்கூற்றில் கொள்வனவிற்காக ரூபா 11,257,906 செலவு செய்யப்பட்டதாக காட்டப்பட்டிருந்ததன் காரணமாக ரூபா 222,560 மேலதிகமாக காட்டப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் நிதிக்கூற்றில் வாகனம் ஒன்று கொள்வனவு செய்யப்படாமல் வாகனக் கொள்வனவுக்கான ஏற்பாட்டுக் கணக்கு வரவு ரூபா 5,405,000 மூலதன செலவுக்கணக்கு செலவு என பதியப்பட்டிருப்பது பௌதீகச் சொத்து இல்லாமல் திரண்ட நிதியும் இத்தொகையினால் அதிகரிக்கப்பட்டிருப்பதானது நிதிக்கூற்றுக்கள் உண்மைத்தன்மையையும் செம்மைத்தன்மையையும் காட்டியிருக்கவில்லை.

#### 1.3.2 பெறவேண்டிய, செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) நீர் விநியோகம் தொடர்பாக நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபைக்கு செலுத்த வேண்டிய ரூபா 6,642,880 தொகையை கடந்த 22 வருடங்களுக்கு மேலாக கொடுத்துத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது தொடர்ச்சியாக நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டு வருகின்றது.

(ஆ) 1991 ஆண்டு இலங்கை மின்சார சபைக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 2,399,352 முற்பணங்களை அறவிடுவதற்கு சபையால் நடவடிக்கை எடுக்கப்படாது தொடர்ச்சியாக நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டு வருகின்றது.

(இ) ஓய்வுபெற்ற, வேலையை விட்டுச் சென்ற, மரணமடைந்த 04 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடவேண்டிய ரூபா 39,276 கடன் மீதியை ஓய்வூதியத்திலிருந்து அல்லது பிணையாளர்களிடமிருந்து அறவிடுவதற்கு 2017 திசெம்பர் 31 வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

1.3.3 ஆவணச் சான்றுகள் இன்மை
-------------------------------------

பின்வரும் ஒவ்வொரு கணக்கு விடயத்திற்கும் எதிரே சுட்டிக் காட்டப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| விடயங்கள் | பெறுமதி (ரூபா) | சான்றுகளின்மை |
|---|---|---|
| காணி | 15,820,000 | காணி உரிமைப்பத்திரம் |
| மீளளிக்கப்பட வேண்டிய வைப்புக்கள் | 15,275,877 | விரிவான அட்டவணைகள் |

2 நிதி மீளாய்வு
------------------

2.1 நிதி விளைவுகள்
---------------------

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுகளின்படி 2017 திசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான மீண்டுவரும் செலவினங்களிலும் கூடிய வருமானம் ரூபா 11,504,832 ஆக இருந்ததுடன் ஒப்பிடுகையில் முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவினங்களிலும் கூடிய வருமானம் ரூபா 8,092,846 ஆக இருந்தமை நிதி விளைவுகளில் ரூபா 3,411,987 முன்னேற்றத்தை காட்டுகின்றது.

2.2 வருமான முகாமைத்துவம்
---------------------------------

2.2.1 நிலுவை வருமானங்கள்
-----------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) வீதவரிகள்
-------------

வீத வரி நிலுவைகள் 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் முறையே ரூபா 6,358,166 மற்றும் ரூபா 8,461,186 காணப்பட்டதற்கு இணங்க சபையின் வீதவரி நிலுவைத் தொகைகள் வருடாந்தம் குறிப்பிட்ட அளவால் அதிகரித்து வருகின்ற போதிலும் சபையினால் இது தொடர்பாக ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வியாபார உரிமைக்கட்டணம்
------------------------------------

அறவிடப்பட வேண்டிய ரூபா 19,500 தொகையான வியாபார உரிமைக் கட்டணத்தை மீளாய்வாண்டில் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

3 செயற்பாட்டு மீளாய்வு

3.1 செயலாற்றுகை

(அ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு

ஐக்கிய நாடுகளின் அமைப்பின் அங்கத்துவ நாடுகளின் அரச தலைவர்களின் தலைமையில் 2015 ஆம் ஆண்டு நிலைபேறான அபிவிருத்தி மகாநாட்டில் தீர்மானிக்கப்பட்டதன் பிரகாரம் சபையினால் 2030 ஆம் ஆண்டில் அடைந்து கொள்ளப்பட வேண்டிய அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல் தொடர்பாக அளவிடுவதற்கான குறிகாட்டிகளை உருவாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) திண்மக் கழிவகற்றல் முகாமைத்துவம்

2010 - 2015 காலப்பகுதியில் பிலிசறு திட்ட நிதி மூலம் திண்மக் கழிவகற்றல் நடவடிக்கைகளுக்கான காணி கொள்வனவு செய்யப்பட்டு கட்டிடம் அமைக்கப்பட்டிருந்த போதிலும் திண்மக் கழிவுகள் சபையின் எல்லைக்குள் அமைந்துள்ள ஆற்றங்கரையில் கொட்டப்பட்டு வருகின்றன. இதனால் அதிகளவான சுற்றாடல் பாதிப்பு ஏற்படுகின்ற போதிலும் இது தொடர்பாக சபையினால் ஆக்க பூர்வமான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை என்பதோடு முகாமை இது தொடர்பான பிரச்சனைகளை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

4 கணக்களிபொறுப்பும் நல்லாளுகையும்

4.1 பாராளுமன்ற கணக்காய்வு குழு அறிக்கை

காத்தான்குடி நகர சபையின் 2017 ஆம் ஆண்டில் பாராளுமன்ற பொதுக் கணக்கு குழு அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டவற்றிற்கு இன்றுவரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. விபரம் பின்வருமாறு

(அ) கிண்ணியாவிற்கும் திருகோணமலைக்கும் இடையே பயணிகள் போக்குவரத்து சேவைக்காக பயன்படுத்தப்பட்ட படகு காத்தான்குடி கொக்கட்டிச்சோலைக்கான போக்குவரத்து சேவைக்குப் பயன்படுத்துவதற்காக ரூபா 323,550 கிரயத்தை செலவுசெய்து காத்தான்குடிக்கு கொண்டுவரப்பட்டிருந்ததுடன் காத்தான்குடி பிரதேச செயலகமும் இந்தப் படகின் திருத்தத்திற்காக ரூபா 489,500 தொகையை செலவிட்டிருந்தது. எவ்வாறாயினும், இது 2017 செப்தெம்பர் 15 வரை பயனற்றிருந்தது.

(ஆ) 1995 தொடக்கம் 2013 வரை உள்ளூராட்சி சபைகளின் ஓய்வூதியத் திட்டத்திற்கு செலுத்த வேண்டிய மாதாந்தப் பங்களிப்பு ரூபா 2,375,058 தொகையானது இன்றுவரை தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) போதியளவு அதிகாரத்தால் ஆதாரப்படுத்தப்படாத கொடுக்கல்வாங்கல்கள்

1992 இல் காத்தான்குடி நகர சபைக்கு அன்பளிப்புச் செய்யப்பட்ட ரூபா 600,000 பெறுமதியான நான்கு சில்லு உழவு இயந்திரமொன்று 2014 திசெம்பர் 31 வரை பயன்படுத்தப்பட்டிருக்காததுடன் இந்த உழவு இயந்திரத்தை திருத்துவதற்கு 2012 ஆம் ஆண்டின் போது ரூபா 315,203 கூட்டுமொத்தத் தொகையை சபை செலவிட்டிருந்தது. எவ்வாறாயினும், 2015 மே 10 ஆம் திகதிய 02/2015 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட நிபந்தனைகளை

கருத்திற்கொள்ளாமல் சபையின் செயலாளரால் ரூபா 16,150 தொகைக்கே இது ஏலத்தில் விற்பனை செய்யப்பட்டிருந்தது.

(ஈ) ஒப்பந்த அடிப்படையில் ஊழியர்களை நியமனம் செய்தல்

----------------------------------------------------------------------

அங்கீகரிக்கப்பட்ட பதவியணியானது 25 உத்தியோகத்தர்களால் ஏற்கனவே விஞ்சப்பட்டிருந்த போதிலும் 25/2014 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் பிரகாரம் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடமிருந்து முன் அங்கீகாரம் பெறப்படாமலும் இது தொடர்பான நிதிகளை ஒதுக்கீடு செய்வதற்கான அங்கீகாரம் பெறப்படாமலும் கிழக்கு மாகாண பிரதம அமைச்சரினால் மேற்கொள்ளப்பட்ட வேண்டுதலை அடிப்படையாகக் கொண்டு 2015, 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளின் போது ஒப்பந்த அடிப்படையில் 77 ஊழியர்களை சபை நியமனம் செய்திருந்தது.

மேலும், சபையால் பராமரிக்கப்பட்ட இரண்டு நூலகங்கள் மற்றும் நான்கு வாசிகசாலைகளிற்கான அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 09 ஆக இருந்த போதிலும் அந்த நூலகங்கள் மற்றும் வாசிக சாலைகளிற்காக 11 அமைய ஊழியர்கள் உள்ளடங்கலாக 23 ஊழியர்கள் இணைத்துக் கொள்ளப்பட்டிருந்தனர்.

(உ) பொதுச் சேவை சேமலாப நிதியத்திற்கான பங்களிப்பு அனுப்பப்படாமை

-------------------------------------------------------------------------------------------

ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகத்தின் 2011 பெப்ரவரி 24 ஆம் திகதிய 2/2011 ஆம் இலக்கச் சுற்றறிக்கையின் பிரகாரம், அமைய மற்றும் தற்காலிக ஊழியர்களின் பங்களிப்பு பொதுச் சேவை சேமலாப நிதியத்திற்கு அனுப்பப்படுதல் வேண்டும். எவ்வாறாயினும், 2015, 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளின் போது நியமனம் செய்யப்பட்ட 77 ஊழியர்கள் தொடர்பான பங்களிப்பு அவர்களின் சம்பளங்களிலிருந்து கழிக்கப்பட்டு பொதுச் சேவை சேமலாப நிதியத்திற்கு அனுப்பப்பட்டிருக்கவில்லை.

(ஊ) நூலகக் கட்டிடத்தை வாடகைக்குக் கொடுத்தல்

-------------------------------------------------------------

விலை மதிப்பீட்டுத் திணைக்களம் நூலகக் கட்டிடத்தின் மாதாந்த வாடகையை ரூபா 125,000 ஆக மதிப்பீடு செய்திருந்த போதிலும் 2014 ஆம் ஆண்டு 04 ஆண்டு காலப்பகுதிக்காக ரூபா 5,000 மாதாந்த வாடகையில் தனியார் கல்வி நிறுவகமொன்றிற்கு இந்தக் கட்டிடத்தை சபை வாடகைக்கு வழங்கியிருந்தது. இதன் விளைவாக, சபையானது ரூபா 4,755,000 வாடகை வருமானத்தை இழந்திருந்தது.

4.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

--------------------------

மீளாய்வாண்டில் வீதவரி மற்றும் ஏனைய வருமானங்களின் பாதீடு செய்யப்பட்ட வருமானத்திற்கும் உள்ளபடியான வருமானத்திற்கும் இடையில் 28% வீதம் வரையான முரண்கள் அவதானிக்கப்பட்டமையினால் பாதீடானது முகாமையின் ஒரு வினைத்திறனான கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டுள்ளது.

5 முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

-------------------------------------------

கீழ்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

| கட்டுப்பாடுகள் | விசேட கவனம் செலுத்த வேண்டிய விடயங்கள் |
| --- | --- |
| (அ) கணக்கீடு | பெற வேண்டியவைகளும் செலுத்த வேண்டியவைகளும் கணக்கிற்கு கொண்டுவரப்படுதல் வேண்டும். |
| (ஆ) வருமான முகாமைத்துவம் | வருமான நிலுவைகளை அறவிட நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (இ) திண்மக் கழிவு முகாமைத்துவம் | திண்மக் கழிவகற்றல் தொடர்பாக முறையான திட்டம் வகுக்கப்பட்டு நடைமுறைப்படுத்தல் வேண்டும். |